1989 மே 12] [பேரவைத் தலைவர்]

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, நிறைவேற்றப் பெற்று, சட்ட முன்வடிவு பிரிவுவாரியாக ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளப் பெற்றது.

பிரிவுகள் 2 முதல் 9 வரை பேரவையின் முடிவிற்கு விடப் பெற்று, நிறைவேற்றப் பெற்றன.

பிரிவு 1, முகப்புரை, நெடுந்தலைப்பு ஆகியவை பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று நிறைவேற்றப் பெற்றன.

(பிற்பகல் 2-50)

மாண்புமிகு திரு. மு. கண்ணப்பன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் கீழ்க்கண்ட தீர்மானத்தை மொழிகிறேன்:

''1989 ஆம் ஆண்டு தமிழ்நாடு இயக்கூர்திகள் வரிவிதிப்பு (திருத்த) சட்டமுன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண்.32/1989) நிறைவேற்றப் பெற வேண்டும்.''

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, சட்ட முன்வடிவு நிறைவேற்றப்பெற்றது.

2. உரிமை மீறல் பிரச்சினைகள்—தொடர்ச்சி.

(இ) ''மக்கள் குரல்,, நாளிதழ் மீது—பேரவைத் தலைவர் தீர்ப்பு.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : திரு. சி. கோவிந்தராஜன் அவர்கள் கொடுத்த ஓர் உரிமை மீறல் பிரச்சினை தொடர்பாக என்னுடைய தீர்ப்பு.

மாண்புமிகு உறுப்பினர் திரு. சி. கோவிந்தராஜன் அவர்கள் மக்கள் குரல் பத்திரிகை மீது ஓர் உரிமைப் பிரச்சினையை அவையில் 4—5—1989 ஆம் தேதியன்று எழுப்பினார்கள். 29—4—1989 ஆம் தேதியிட்ட மக்கள் குரல் பத்திரிகையில் ''மார்க்சிஸ்ட் கட்சி தமிழகத்தில் சந்தர்ப்பவாத போக்கில் செயல்படுகிறது என்றும் மேல்சபையைத் திரும்ப ஏற்படுத்துவது பற்றித் தீர்மானம் சட்டசபையில் வந்தபோது மார்க்சிஸ்ட் உறுப்பினர்கள் சபைக்கு வராமலேயே இருந்து விட்டார்கள் என்றும் கம்யூனிஸ்ட் கட்சி குறை கூறியிருக்கிறது'' என்று வந்துள்ள வாசகம் குறித்து அவை உரிமைப் பிரச்சினையை எழுப்பினார். அவர் பேசும்போது ''அன்றையதினம் நாங்கள் பேரவையில் கலந்து கொண்டு எங்களுடைய கட்சியினுடைய கருத்தையும் எங்களுடைய கொள்கைத் திட்டத்திலே மேல்சபை தேவையில்லை என்று அறிவித்து இருப்பதையும் எங்கள் அணியின் தலைவர் இங்கே எடுத்துக் கூறி அதற்குப்

பிறகு விவாதம் நடந்து முடிந்த பிறகு இதற்கான ஓட்டெடுப்பு வந்த காலத்தில்தான் நாங்கள் மீண்டும் எங்களுடைய நிலையை எங்களுடைய அணித் தலைவர் எடுத்துக் கூறிய பிறகு வெளிநடப்புச் செய்தோமே தவிர சபைக்கு வராமலே இருந்தது என்பது இல்லை'' என்று விளக்கினார். இது குறித்து மக்கள் குரல் பத்திரிகை ஆசிரியரிடமிருந்து கீழ்க்கண்ட விளக்கம் கிடைக்கப் பெற்றுள்ளது:

''திரு. கோவிந்தராஜன் எழுப்பிய பிரச்சினை மக்கள் குரலில் வந்த அதனுடைய விமர்சனக் கருத்து அல்லவே அல்ல. புது டில்லியில் இந்திய கம்யூனிஸ்ட் கட்சியின் பொதுச் செயலாளர் தோழர் சி. ராஜேஸ்வரராவ் அவர்கள் அளித்த பேட்டியைப் பற்றிய செய்தி அது. அதை எல்லா நாளேடுகளுக்கும் தந்தவை இந்தியாவின் இரண்டு செய்தி நிறுவனங்கள் ஆகும், மார்க்சிஸ்ட் கட்சி எப்படி மற்ற கட்சிகளை விமர்சனம் செய்கிறதோ அதே மாதிரியாக மார்க்சிஸ்ட் கட்சியைப் பற்றி இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சியின் தலைவர் செய்த விமர்சனத்தை ஒட்டிய செய்தியாகும் அது. இந்தியன் எக்ஸ்பிரஸ் போன்ற பல ஏடுகளில் வெளியான செய்தியைத் தான் மக்கள் குரலும் வெளியிட்டது. இது முற்றிலுமாக பத்திரிகை சுதந்திரத்தை ஒட்டிய பிரச்சினையே தவிர சட்டசபை உரிமை பற்றியதல்ல.

மார்க்சிஸ்ட் கட்சி மேலவை மீண்டும் வருவதை சொள்கைப் பிடிப்போடு எதிர்த்ததாக திரு. கோவிந்தராஜன் கூறுவது மிக அதிகப்பட்சமான அவரது கருத்தே தவிர, அதை ஏற்றுப் பாராட்ட வேண்டும் என்ற கட்டாயம், மக்கள் குரலுக்கோ அல்லது வேறு எந்த ஏட்டுக்கோ கிடையாது. மேலவை தீர்மான ஓட்டு எடுப்புக்கு விடப்பட்டபோது அந்த எதிர்க்கவோ அல்லது ஆதரிக்கவோ அல்லது நடுநிலை வகிக்கவோ மார்க்சிஸ்ட் கட்சியின் உறுப்பினர்கள் சட்டசபையில் இல்லை என்பதுதான் மக்கள் குரலும் இதர ஏடுகளும் அறிந்து வெளியிட்ட உண்மைத் தகவல்,

கண்டன வெளிநடப்புக் காரணமாக வாக்கெடுப்பில் கலந்து கொள்ளவில்லை என்று திரு. கோவிந்தராஜன் கூறும் காரணத்தைக் கவனிக்க வேண்டியது தோழர் சி. ராஜேஸ்வர ராவ் அவர்களே தவிர மக்கள் குரல் அல்ல.

ஒரு அரசியல் தலைவர் ஏதோ ஒன்றைச் சொல்லும்போது அவர் சொல்வது உண்மையா என்பதை ஆராய்ந்து, பிறகு வெளியிடுவது என்பது உலகிலேயே எந்த ஏட்டிற்கும் சாத்திய மல்ல, எங்களுக்கும் சாத்தியமல்ல என்று மக்கள் குரல் குறிப்பிட்டிருக்கிறது,

[பேரவைத் தலைவர்]

ஒரு பத்திரிகை ஆசிரியர் ஓர் அரசியல் தலைவர் ஏதோ ஒன்றைச் சொல்லும்போது அதை ஆராய்ந்து பிறகு வெளியிடுவது எங்களுக்கு சாத்தியமில்லை என்று கூறுவது ஏற்கத் தக்கதாக இல்லை.

ஒரு அரசியல் தலைவர் சட்டமன்றப் பேரவை நடவடிக்கை குறித்து ஓர் அறிக்கையை வெளியிடுகின்றபோது அது உண்மைதானா என்று ஆராய்ந்து பின் பத்திரிகையில் வெளியிட வேண்டும். இல்லையென்றால் அது பேரவையின் நடவடிக்கைகளை திரித்துக் கூறுவதற்கு ஒப்பாகும்.

"To print and publish any libel reflecting on the proceedings of the House has been held to be a high violation of the rights and privileges of the House".
(May's Parliamentary Practice.)

கண்டன வெளிநடப்புக் காரணமாக வாக்கெடுப்பில் கலந்து கொள்ளவில்லை என்று திரு. கோவிந்தராஜன் கூறும் காரணத்தைக் கவனிக்க வேண்டியது தோழர் திரு. சி. ராஜேஸ்வரராவ் அவர்களே தவிர மக்கள் குரல் அல்ல என்று ஆசிரியர் எழுதி இருப்பது ஒரு தரமான பத்திரிகையின் பொறுப்புள்ள வாதமாக இல்லை. இது கண்டனத்திற்கு உரியது,

அவை நடவடிக்கைகள் குறித்த செய்திகளை வெளியிடும் போது பத்திரிகைகளுக்கும் மிகுந்த பொறுப்புள்ளது. உண்மையான நடவடிக்கைகளைத் தான் அவைகள் வெளியிட வேண்டும். உண்மைக்கு மாறான செய்திகளை, நடவடிக்கைகளை வெளியிட்டு விட்டு, 'அது பிறர் ஒருவர் கூற்று' என்று பிறரைப் பொறுப்பாக்குவது உகந்தது அல்ல. இந்தக் கடமை உணர்ச்சியைப் பத்திரிக்கைகள் கடைப்பிடிக்க வேண்டுமென்று கேட்டுக் கொண்டு இத்துடன் இப்பிரச்சினையில் மேல் நடவடிக்கை தேவையில்லை என்று தீர்ப்பு அளிக்கிறேன்.

9. அறிவிப்பு.

பேரவை நிறைவேற்றிய அலுவல்கள் பற்றிய விவரங்கள்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : தமிழ்நாடு சட்டமன்றப் பேரவைக்கு இவ்வாண்டு நடைபெற்ற பொதுத் தேர்தலுக்குப் பின் பேரவையின் முதல் கூட்டத் தொடர் 6—2—1989ஆம் நாளன்று தொடங்கி 21—2—1989 வரையிலும், மீண்டும் 25—3—1989 அன்று தொடங்கி இன்று (12—5—1989) வரையிலும் நடைபெற்றுள்ளது.